]பேரவைத் தலைவர்] [1975 நவம்பர் 7

பிரிவுகள் 2 முதல் 6 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செல்திறனுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/75) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(உ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/75).

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

---

*1975 அக்டோபர் 25-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 நவம்பர் 7

தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 30/1973) 9-வது பிரிவின் வரம்பு நிபந்தனையின்கீழ், இச்சட்டத்தின் கீழ் உரிமதாரருக்குக் கொடுக்கப்படக் கூடிய தொகையிலிருந்து தனக்கு ஏற்பட்ட இழப்பு என அரசு கருதும் தொகையைக் கழித்துக் கொள்கிற தனது உத்தேசத்தை அறிவிக்கும் அறிவிப்பு ஒன்று அந்நிறுவன உடைமை அரசிடம் நிலைபெறும் நாளிலிருந்து ஓராண்டுக்குள் கொடுக்கப்பட வேண்டும். இருப்புப் பட்டியல்கள் அனுப்பப்பட்டு அவை முழுமையாகப் பரிசிலனை செய்யப்பட்ட பின்னரே அரசுக்கு ஏற்பட்ட இழப்பு பற்றியும் அதற்குக் கழித்துக் கொள்ளப்பட வேண்டிய தொகைகள் பற்றியும் வரையறுக்க இயலும். முன்னாள் உரிமைதாரர்களில் சிலர் தங்களின் இருப்புப் பட்டியல்களை இன்னும் பணிந்தனுப்பவில்லை. எனவே, தொகை கழித்துக் கொள்வதென்ற அரசின் உத்தேசத்தை அறிவிக்கும் அறிவிப்பு, அந்நிறுவனத்தின் உடைமை அரசிடம் நிலைபெற்ற நாளிலிருந்து ஓராண்டு கால அளவு அல்லது அந்த நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் அனைத்தையும் அடக்கிய முழுமையான பட்டியலும், அதன் ஆவணங்கள் குறித்த பட்டியலும் அரசிடம் ஒப்படைக்கப் பெற்ற நாளிலிருந்து மூன்று திங்கள் கால அளவு, இவற்றில் ஏது பிந்தியதோ அக்கால அளவிற்குள் அளிக்கப்பட வேண்டும் என்கிற வகையில் அச்சட்டத்தின் 9-வது பிரிவின் தற்போதைய வரம்பு நிபந்தனைக்கு விளக்கம் அளிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்சொன்ன சட்டத்தின் 9-வது பிரிவைச் சேர்ந்த வரம்பு நிபந்தனைக்குத் தக்கவாறு விளக்கமளிப்பது அவசியமெனக் கருதப்பட்டுள்ளது. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன செயற்குறிப்பிற்குச் செயல் வடிவமளிக்கும் கருத்துடனியற்றப்பட்டதாகும். இந்த மன்றம் இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மசோதாவின் நோக்கம் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் இப்போது இந்த அளவிற்குக் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியம் என்ன என்பதைப் பற்றி எனக்குச் சில ஐயப்பாடுகள் இருக்கின்றன.

குறிப்பாக, ஏற்கெனவே இந்தத் தனியார் மின்சார நிறுவனங்களையெல்லாம் எடுத்துக் கொண்ட பிறகு ஏற்பட்ட மாறுதல்கள் என்ன என்பது தெரிய வேண்டும். குறிப்பாக,

In the present Act provision of 4 months' notice has been deleted and the submission of inventories takes place after the undertaking has vested in Government. Within a period of one year from the vesting date or within a period of three months from the date on which complete inventory of all the assets belonging to the undertaking and of its documents are handed over to the Government, whichever period is later.

என்பது இப்போது கொடுக்கப்பட்டு இருக்கிறது. இது இவ்வளவு காலதாமதப்பட்டிருக்க வேண்டிய அவசியம் என்ன என்று தெரியவில்லை. நாம் எடுத்த காலத்திலிருந்து எந்த அளவிற்கு நமக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்ற விவரம் தெரியவில்லை, தெரியாமல் போய் விட்டது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு நமக்குச் சேர வேண்டியது எவ்வளவு, எந்த வகையிலே அதைப் பெறுவது, இந்தக் கால தாமதத்தினால் நமக்குக் கிடைக்க வேண்டிய நிதி எந்த அளவிற்கு கிடைக்காமல் இருக்கிறது என்பதை அறிந்து கொள்வதற்கு என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பழைய 1934-ம் ஆண்டு ஆக்டில்

Under the old Act four months' notice was given to the licensee prior to the take over of their Electrical undertaking.

அதிலே அவ்வளவுதான் முடியும்.

In the present Act provision of 4 months' notice has been deleted and the submission of inventories takes place after the undertaking has vested in Government. In actual working, the

inventories have been received later after the expiry of the due date prescribed under Section 16 of the Act. Unless these are received, the field check could not be done. Only in field check of inventories there is much scope for verifying non-bonafide transactions. The one year prescribed under Section 9 is coming to a close on 6th January 1975.

சில நிறுவனங்கள் இன்வெண்ட்ரீஸ் பூராவையும் எடுக்க முடியவில்லை. நம்முடைய அரசாங்கத்திற்கு ஏற்படுகிற இழப்பை தவிர்ப்பதற்காக இந்தப் புதிய திருத்தத்தின் மூலம் செய்யப்படுகிறது. அந்த நிறுவனங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டதிலிருந்து ஓர் ஆண்டுக்குள் — அல்லது கொடுத்ததிலிருந்து

Within a period of one year from the vesting date or within a period of three months from the date on which complete inventory of all the assets belonging to the undertaking and of its documents are handed over to the Government, whichever period is later.

இப்படி எடுத்துக் கொள்ளப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட ஓர் ஆண்டு காலத்திற்குள் இன்வெண்டரி எடுத்து அதைப் பரிசிலனை செய்து நம்முடைய நிலையைப் பாதுகாத்துக் கொள்கிற அளவிற்கு இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: எந்தெந்த நிறுவனங்கள் கொடுத்து இருக்கிறார்கள், எந்தெந்த நிறுவனங்கள் கொடுப்பதற்கு முயற்சி செய்திருக்கின்றன, எந்தெந்த நிறுவனங்கள் கொடுக்கவில்லை என்பதைப் பற்றிய விவரங்கள் தரப்படவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: செங்கோட்டை நிறுவனம் கொடுக்கவில்லை. மற்ற நிறுவனங்கள் பற்றிய விவரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/75) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/75) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.